உ

முருகன் துணை

திருவொற்றியூர்

ஸ்ரீ வடிவுடையம்மன்

தியான மஞ்சரி.

ஸ்ரீ கிருஷ்ண ஷண்முகக் காமாக்ஷியம்மன்
கீர்த்தனைகளும் சேர்ந்துளது.

OFFICE OF T...
28 APR 1919
MADRAS

சென்னை

தமிழ் நாடக சங்கீத சாகித்ய உபாத்தியாயர்

ச. ந. சங்கரலிங்க நாடார்

எழுதியது.

சத்தகாமாலை, புஸ்தகாபிமானிகளால்
வெளியிடப்பட்டு

சென்னை
...ர்டியன் அச்சுக்கூடத்தில்
...பதிப்பிக்கப்பட்டது.

1919

Q25:417,
N19
[49471]

28 APR 1919

அபிப்பிராய வசனம்.

செந்தமிழ்த் தெய்வத் திருவருளால், நமது சத்ககதாமாலை 12-வது புஸ்தகம் வெளிவரப் பெற்றோம். இந்நூல் போற்றும் அம்மையினருள், நம்மை யாதரிக்குமாக!

தரித்திரன் தனவானாக முயற்சிப்பதுபோல், தமிழ் மணமறியா எனது மனம், தமிழ்பாட நாடுகின்றது. (ஆசை என்பதாரை விட்டகலும்) ஆயி னும், பலபெரிய பட்டந்தரிக்கவும், பெருமைபெறவும், கல்விப்பெருக்கைக் காட்டவும், இந்நூலெழுத முன்வரவில்லை. முருகன் கிருபையாலும், குருவாய் மனதிற் குடிகொண்டிலகும், கன்னிச்சமின், உடுமலை, ஸ்ரீமான், சாபகவி யவர்களின் ஆசியாலும், அவ்வப்போது மனதுதிக்கும் பாடல் களைக் கோர்வையாக எழுதி, எனது சத்ககதாபிமான நண்பர்களிடம், வாசிக்க நேருஞ்சமயம், அவர்களின் தன சகாயத்தால், அச்சிட்டு வெளி வந்துலவுகின்றதே தவிர வேறன்று.

வெருவாய், குருவுபதேச இலக்கண விலக்கியப் பயிற்சியில்லாமல், வழிபடுகடவுளின்வல்லமையால் ஒருவாறு மனதிற்றோன்றவரையுந் தமி ழாதவின், பிழைகாண்கினும் பெரியோர் க்ஷமித்து, திருத்தமா யெழுதும் வழியைத் தெரிவிப்பா ரென்பதென் மனத்துணிபு.

நிற்க. சின்னாள்முன் விந்தியாவதி என்னும் பத்திரிகாதிபத்திபத்தை நடத்திவந்த என்னை தெய்வச்செயல், டிராமா கம்பெனி நாடகாசிரியனாக, மாற்றினது பெரிதும் வியக்கத்தக்கதே.

அங்ஙனம் நம்மாலெழுதப்பட்ட நாடகங்களை, சில நாடகக்கம்பெனி யார் பாடியும் ஆடியும் வருகின்றனர். ஆனால் நாடகங்களை அச்சிட்டு விற் பனைசெய்து, உமக்கும் தக்க பரிசளிக்கிறோமென்று அதை யச்சிட்டு வேறு வாத்திகளின் பெயரைப் புனைந்து, விற்பனைசெய்யும், இரண்டொரு புஸ் தக வியாபாரிகளின் இழிவான நடத்தையை யிங்கெழுத மனமஞ்சுகின் றது. இதைக்காணுமவர்கள், முகமும் அகமும் என்னவாகுமோ?

இவ்வித மினிநிகழாமல், நமது சத்கதாமாலையை, வெளிப்படுத்தும் கனதனவான்கள், நாமெழுதுவதும், எழுதியிருப்பதுமாகிய, நாடகங்களை அச்சிட்டு விற்க முன்வருவாராகில், தக்கலாபமடையலாம். சகல சுதந்த ரத்துடனும், அவர்களுக்கு விற்பனைக்குக் கொடுக்கச் சித்தமா யிருக் கின்றேன்.

இங்ஙனம்,

ச. சு. ச. லிங்கம்.

புகழ்ச்சிப்பா

இது ப[illegible]தாங்கி உபாத்தியாயர்

கு. முத்துசாமி வுடையார் எழுதியது

கலித்துறை

* சீரார் திருவொற்றி யூரார் வடிவம்மை சேவடிமேல்
தாரார் தமிழ்ப்பதி கம்புனைந் தேற்றினன் சந்த்ரகுலத்
தோரார் மரபினன் சுப்பைய மால்சுதன் சென்னைநகர்
ஊரார் கவிவலன் சங்கர லிங்கனெனன் றேதரசே.

---

* இப்பாடலாசிரியர், நமது நண்பர்களிலொருவர், வெகுகாலப்பிரியர், 25-வயதுள்ள இளமையாளர். தமிழில் சமத்காரப் பாண்டித்யம் பெற்றவர். விநோத விடுகதை எழுதுவதில் கைதேர்ந்தவர். மகா ஜோசியநிபுணர், கைக்களத்தூர் கிராமத்தபாலாபீஸ் தலைவர் எலிமென்டிரி ஸ்கூல் உபாத்தியாயர், சைவநெறியும், தயாளசிந்தையும், சண்முகத்தியானமுமுள்ளவர். இவரெழுதிய சிற்சில பதிகங்களும் வெளிவந்திருக்கின்றன. நமது வித்தியாவதி பத்திரிகைக்குப் பெரிதும் உதவிபுரிந்தவர். தமிழிலிவர் கேட்குஞ் சந்தேக வினவிற்கு; விடைசொல்வ தசாத்தியம். ஒருசமயம் நம்மைத் தம்மூர் வரவழைத்து சின்னாளங்கிருத்தி, திருவரங்கக்கலம்பகம், உரைகேட்டதுமன்றி, நமது சத்கதாபிரசங்கம் நடத்துவித்து, அங்குள்ள சில கிராமாதிகாரிகளையும் நம்முடன் பழகுவித்து நற்பரிசளித்துச் சென்னைக்கனுப்பினது மன்றி நமது திருமணத்தின்போது வாழ்த்துப்பா அச்சிட்டு வெளிப்படுத்தியவர். இப்பதிகத்தை இவரின் பார்வைக்கனுப்பிய போது பார்வையிட்டு புகழ்ச்சிப்பாவுடன் அச்சிடும் செலவிற்கும் அனுப்பினார். இவ்வருங்குணாளர் எழுதிய, திருப்போரூர், ஸ்ரீ சிவ ஷண்முகமாலை என்னும் புஸ்தகக்காப்பி நம்மிடமிருக்கிறது. இதனைக் கூடிய சீக்கிரம் வெளியிடுவோம். எல்லாம் வல்ல இறைவன் இவ்விளவயதில் இவரைத் தன்பதி யழைத்துக்கொண்டது முன்வினைப் பயன்போலும்?

அன்பான இந்நண்பரின் நன்றியறிதற்காக, இச்சிறு நூலை, இவர் பேருக்கு, அர்ப்பணம் செய்கிறேன்.

நூலாசிரியன்.

உ

முருகன் துணை

திருவொற்றியூர்

ஸ்ரீ வடிவுடையம்மன்

தியானமஞ்சரி

OFFICE ... 28 APR 1919 ... MADRAS
144471
1189
184-0554

விநாயகர் துதி

விருத்தம்

செந்தேனைத் தித்திக்கும் பாலைப் பாகைத்
தெவிட்டாதத் தெள்ளமுதைச் சிவகற்கண்டைக்
கொந்தாருங் குழலுமையாள் புதல்வன் றன்னைக்
குவலயமு மமரர்களும் போற்றுந்தேவைச்
சிந்தூர நுதலோனைத் திகழ்செம் பொன்னைச்
சிவகுருவின் முனமினிய தமையனாக
வந்தோனைத் தமிழ்க்கருளும் புனித ஞான
வல்லபை கணேச்சுரனை வணங்குவோமே.

கீதம்

(வேதமனுத்தஜாய்—என்றமெட்டு)

வேதவிநாயகா வேதமெழுதியவா
பாதம்பணியுமென்னைப் பாதுகாத்திடவா
ஆதிகணபதியே ஆருதாரநிதியே
ஓதுமெனதுகுறை யோடவித்ததியே (வேத)

சுந்தரசோபித குண்டலாதரனே
சுகுணசிங்காரசம் போசிவசுதனே
மந்த்ரமூலாதரா மங்களகுருபர
கந்தன்சகோதரா கனகவஜ்ரகா (வேத)

துங்ககணேஸ்வர தூயமகேஸ்வர
மங்கைமனோகரா மாதவஸ்ரீதர
சங்கமகிபா சாமிலம்போதா
சங்கரலிங்க... கீத்...

முருகன் றுதி

விருத்தம்

தேவர்தந் துயரந்தீரத் திகழ்சர வணையிற்றோன்றி
மாவடி வேலைத்தாங்கி மாயராக்ஷதரை வென்று
பாவலர்போற்றுஞ் செந்திற் பதிதனில் வாழுமெங்கள்
சேவலங் கொடியோன் காலைச் சிந்திப்ப தெனதுவேலை.

பஜனைப்பா

(வசூநாலேநாலே சாவரியா மனு—என்ற மெட்டு)

வடி வேலாசீலா மரகதமாமயி லேறும் விசாலா
வந்தருள்தாராய் தணிகை
மலையலங்காரா (வடி)

ஆலமுண்ட நீலகண்டன் காலுமகிழ் பாலனே
ஜாலமேனோ யேழைநானே ஆளுங்குண சீலனே (வடி)

உன்னையன்றி தெய்வம்வேறு உலகிலுண்டோ ஷண்முகா
என்னைப்பார்த்து காக்கயின்ன மேதுவர்மந் தண்முகா (வடி)

மங்கைவள்ளி தெய்வயானை மாதுமகிழ் நாதனே
சங்கரலிங் கன்சங்கீதத் தமிழ்மணக்கும் பாதனே (வடி)

குரு வாழ்த்து

(நோட்)

அலைசேர் கடல்சூழ் புவிஎங்கும் அதிபுகழாகிய பெயர்தங்கும்
கலைசேர் சாபக்கவிராஜன் கதிர்மதி சூழுடு மலைவாசன்
உலகமெலா மகிழ்நேசன் உயர்தவகுணமிகு பிரகாசன்
முத்துசாமி பெயர்வாழ்க முருகனெனங் குருபர னருள்சூழ்க
...க்வசங்கம் மிகவாழ்க விதரண குணசபை யோர்வாழ்க
...ணனும் சங்கரலிங்கன் தமிழ்வாழ்க. (...

பதிகம்

(ஆ. வி.)

பார்வதி கௌரிமுக் கண்ணிபை ரவிகாளி
        பாண்டியகு மாரி மாரி
பகவதீ பண்ணம்ப ணத்திநா ராயணி
        பாக்யசம் பூர்ண மித்ரி
தார்கொண்ட சூலிஎண் டோளிசுந் தரிநீலி
        தாருகா சூரி வீரி
சத்தியம் பிகைபூத வாகனீ யோராறு
        சமயத்தி யிமய புத்ரி
பேர்கொண்ட சக்ரவா ரத்திலகு மாதரி
        பேசுமென் றமிழா தரி
பித்தரொடு நிர்த்தனஞ் செய்திடப் பாகமது
        பெற்றசிங் காரி ஞமலி
தேர்கொண்ட சாலையும் நீர்கொண்ட சோலையும்
        சேர்ந்தண்ட மூடு நிற்குஞ்
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
        தேவி வடிவுடை யம்மையே. (1)

அம்மாவெ னப்புகலு மைந்தர்திரு முகநோக்கி
        யன்பான வார்த்தை சொல்லி
அப்பனே நீவேண்டு பொருளென்ன வெனவினவி
        ஆயாச நீக்கி டாது
சும்மாயி ருப்பதும் பெற்றதாய் நீதியோ
        சுதரிலா மலடி தானோ
சொல்லுவா யீதுனக் காகுமோ வெனையீன்ற
        சுகுணதாய் நீயல் லவோ
எம்மீது பிசகில்லை அம்மம்ம நானுன்னை
        என்றும் மறந்த தில்லை
இனியேனு மனம்வந்து கனிவான வரமீந்து
        என்குறையை மாற்றி யருள்வாய்

செம்மான் பயின்றதோர் பெண்மானை சிறைகொண்ட
சிவகுருவை யீன்ற தாயே
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (2)

ஆனாலும் நீசெய்வ தனியாய மனியாயம்
அன்னையே தரும மிதுவோ
ஆரிடம் போயெந்தன் குறையெலா மோதுவேன்
அம்மையுனை யறியா மலே
தானாக வெனையீன்ற தாயம்யார் சொல்லுவாய்
தநயனெற் குதவி செயவே
சகலமும றிந்தநீ வெகுளியொடி ருப்பதுஞ்
சரியல்ல தருண மிதுவே
வானோர் போற்றும்வன சிங்கமுது கேறிஎன்
மனத்துயர கற்ற வருவாய்
மங்களப் பிரகாச சங்கரற் குல்லாச
வாலைபரு வதவர்த் தனி
* தேனேறி † தேனிட்ட சோலையொடு சாலையுஞ்
சித்தர்புகழ் தீர்த்த மோங்குஞ்
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (3)

போற்றினேன் கல்லாத புல்லரைப் பலவிதம்
பொன்பொருள் கொடுப்ப ரென்றே
புவியெங்கு மோடினேன் நாடினேன் பலரிடம்
போவென்று தள்ளி விட்டார்
எற்றினேன் பங்குபங் காளிகளு மென்குறையை
யேற்காதி ருந்து விட்டார்
இன்பான தந்தைபொருள் கல்வியே யல்லாது
யேதொன்று மில்லை கண்டாய்
சாற்றினேன் றமிழ்மாலை நின்கோயில் வலம்வந்தென்
சஞ்சலம கற்ற வென்றே
தருணமிது மைந்தனென் குறைதனை யகற்றிநற்
றனமோடு கல்வி தருவாய்
தீர்த்தமிலகிய செல்வி பூர்த்தமர கதவல்லி
சிவகாம வல்லி நல்ல
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (4)

---

* தேன் - வண்டு. † தேன் - கூடு.

பெற்றதாய் மிகவெனைப் பாதுகாத் திட்டதாய்
பெயரிட் டழைத்த நற்றாய்
பிள்ளையென் றுமகம் பார்த்து மன்னம்ப டைத்துவெகு
பிரியமாய்க் காத்திட்ட தாய்
உற்றதாய் நான்செய்த குற்றம்பொ றுத்ததாய்
வோங்குதமிழ் கற்பித்த தாய்
உண்மையாய் நீயென்று திண்ணமா யெண்ணினே
னுன்றன்மன திதைய றியுமே
இத்தனைச் சொல்லியும் பித்தர்போல் பேசா
திருப்பதுன் நீதி தானோ
என்னபிழை செய்தாலு மன்னையுனை யல்லாது
என்றுயா சுற்ற வேறார்
சித்தமதி ரங்கிநா னித்தமுனை போற்றிடுஞ்
சித்தமதெ னக்கருளு வாய்
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (5)

கோடிபிழை நான்செய்தி ருந்தாலு மன்னித்து
குறைதீர்க்க வேண்டு கின்றேன்
கோபத்தை நீக்கிபரி தாபமென் னுந்தாய
குணந்தாக் கோரு கின்றேன்
ஆடுமயி லன்னநடை மாதர்தரு மாவலை
யகற்றவே வேண்டு கின்றேன்
அனுதினமு முன்கோயில் வலம்வந்து துதிபாடும்
அன்புதவ வேண்டு கின்றேன்
நாடிவரு வார்க்கிலையெ னுமற்கொ டுத்திடும்
நவநிதியம் வேண்டு கின்றேன்
நாளுமென் றுதியேன்று கோறுமிவ் வாமீந்து
நற்கதிகொ டுத்தா ளுவாய்
தேடுமா லயனிருவர் காணொணுச் செல்வமே
சிற்பரா னந்த தவமே
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (6)

பிச்சைக்கு சுந்தபே யாண்டிச்சி என்றனே
பிள்ளையா யானை தன்னைப்
பெற்றக்கு றத்திநய மற்றச்ச டைச்சிகூடு
பிட்டுக்கு மண்ணெடுத்த
கொச்சைத்த லைச்சிகா டுற்றப்பு லைச்சிஎன
கொச்சைமொழி பேசி னேனே

குறையெதுஞ் செய்திலாச் சிறியேனென் மீதிந்த
கோபமேன் கொண்ட தம்மா
பச்சைப்ப சுந்துளவ மாயனுர் தங்கையே
பாரெலா மீன்ற வுமையே
பாடுமென் முகனேக்கி நாடுமோர் வாமீந்து
பாக்கியங் கல்வி தருவாய்
செச்சைப்பு யாசலவி னேதகரு ணுகாரச்
சிவசுப்ர மணியு லாவுஞ்
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (7)

வெள்ளியங் கிரிவாச னின்னருமை நாயகன்
வெள்ளிதான் பஞ்ச மில்லை
விவசாய முதல்வனு முனதண்ணன் பலராமன்
விளைவிற்கு பஞ்ச மில்லை
புள்ளிமயி லேறுமுன் புதல்வனும் வடிவேலன்
பொன்னகர்க் கிறைவன் மருகன்
பொன்னுக்கு பஞ்சமிலை நின்னப்பன் மலைநாடன்
பூமிபுகழ் மகராசி நீ
* வெள்ளிமலை தனில்கொஞ்சங் கிள்ளிக்கொ டுத்தாலென்
விசன மெல்லாந் தீருமே
வேண்டாமென் றுனைதடுப் பாரொருவ ருண்டோபொய்
வேஷமோ பரிகாசமோ
தெள்ளுதமிழ் சொல்லுவோர்க் கிலைஎனு மற்றருஞ்
செல்வியே தயை செய்யம்மா
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே (8)

அன்பேஎன் னன்பான வமுதமே தேனே
யரும்பொனே முத்து மணியே
ஆபத்ச காயமே தீபப்பிர காசமே
ஆனந்த கருணை நிதியே
இன்பேஎன் னுருயிர்க் குயிரேசி ருங்கார
இன்பசா கரஞா னமே
என்றுதமிழ் பாடிநான் நின்றுதுதி செய்திடுவ
தெல்லாந்தெ ரிந்து மறியா
வன்பேய்பி சாசுபோல் கல்மனங் கொண்டிந்த
வாறிருப் பதுத ருமமோ
வையகமெ லாமீன்ற தெய்வம் நீ யல்லவோ
வத்ஸனுன் பால னலவோ

---

* வெள்ளிமலை – விபூதி.

[stamp]

தென்பான கல்வியொடு செல்வமது தந்தருட்
சித்தர்சிவ பத்தர் சூழுஞ்
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (9)

இன்னமுஞ் சொல்லவோ வுன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
யேதேது இனிஎனல் வுலகமுனை பழிகாரி
என்றேசும் பெயரொ டுப்பாய்
சொன்னதோர் தோத்திரப் பதிகபா மாலையைச்
சூடி சந்தோஷ மாக
சுதனெந்தன் முன்வந்து நிகமுன்னை போற்றிடுஞ்
சுகமான வரம தருள்வாய்
என்னமோ சொன்னே னெனப்பரா முகமா
யிருக்கிலுன் சந்நதி விடேன்
இதுவுண்மை என்றெண்ணு மதிகங்கை முடிசூடு
மீஸ்வரி புவனேஸ் வரி
தென்னைமா கதலிமல் லிகைமுல்லை வர்க்கமொடு
செந்நெலார் கழனி சூழ்ந்த
சீர்கொண்ட திருவொற்றி யூர்கொண்ட தியாகேசர்
தேவி வடிவுடை யம்மையே. (10)

கீர்த்தனை

(ஓதிருநல்லூர் வளரோய்யாரா—என்றமெட்டு)

* ஆதிபுரி யானதிரு வொற்றி யூ
ரமர்ந்திலகு மாரிசிவ சத்தி போற்று
மன்பரித யத்தமருஞ் சித்தி யுந்தன்
அருமலர்பத மதை துதிசெய
வரமருள்மர கதவடிவுடை
யம்பிகையே செஞ்சடைக்கிழத்தி தேவி
யாரணிமா காளிபூர ணத்தி (ஆதி)

பாதிமதி சூடுமான் பாரி மதுரைப்
பாண்டியர்கள் வேண்டியகு மாரி எங்கள்
பார்வதியே நீறணிவொய் யாரி செழும்
பங்கயமா ரங்கமதிற்
சங்கரலிங் கன்றமிழின்
பாடலதைச் சூடியசிங்காரி போற்றும்
பாலர்தமைக் காத்தருள்கௌ மாரி (ஆதி)

* ஆதிபுரி—திருவொற்றியூர்.

வேறு

(இந்தவுடலை நம்பியிருக்கலாமா—என்றமெட்டு)

எதுக் கித்தனை வர்மம் என்மேலம்மா
சாதிப்ப தழகல்ல தணிவாய்சும்மா (எது)

நீதிக்கு முன்கோப நிலைநிற்குமா
வாதிக்கு முனக்கிர்த மனமாகுமா (எது)

காயத்தை நிலை என்று கருதிநின்றேன்
மாயத்தை யறியாமல் மயங்குகின்றேன் (எது)

ஈச னிடத்தமரும் ஈஸ்வரியே
தாசன் சங்கரலிங்கன் றமிழ்வாரியே (எது)

வேறு

(இன்னும் வர்மமேனையா ஈராறுகையா—என்றமெட்டு)

ஜாலம் செய்வதேனம்மா தாசன்மேலம்மா பாடுந் தாசன்மேலம்மா
காலனணுகுமுன்னங் காத்தருளம்மா (ஜாலம்)

நீல சியாமளவர்ண நீலிகபாலி சிவ நீலிகபாலி
பால னெனதுமுகம் பாரனுகூலி (ஜாலம்)

தாயிருந்தும் பிள்ளைநான் தயங்கிடலாமா வீணய்த் தங்கிடலாமா
நீயிதை நினையாமல் நின்றிடலாமா (ஜாலம்)

வாயிருந்தும் பேசிடா வஞ்சகமேது இந்த வஞ்சகமேது
சேயன் சங்கரலிங்கன் றேடுமிப்போது (ஜாலம்)

வேறு

(சாமீ சோமசேகரனருளும்பாலா—என்றமெட்டு)

தேவ—தியாகராஜ மோகனசிங்காரி மாரி வெகு
தேசதாசர் பூஜிதகெம்பீரி நாரி தவ
யோகஞான த்யானதுங்கமாரி வீரி மறை
யோதுஞால மீதிலாருதாரி சூரி (தேவ)

அம்பிகை வராகிசத்தி மானேதேனே உன்னை
நம்புமென்னை யாதரிக்கா தேனேவீணே இனி
வம்புசெய்வ தந்தமல்ல தானேநானே உன்
னம்புயப் பதந்தனைவி டேனேகோனே (தேவ)

பெற்றபிள்ளை மீதிலேது சூதுவாது வாய்
பேசிடா திருப்பதுத காதுநீது இனி
சற்றுமுன்னை என்பழிவி டாதுமீது பாடுஞ்
[illegible] ளிப் போதுமாது (தேவ)

வேறு

(மால்மருகா வடி வேல்முருகா—என்றமெட்டு)

பாரா ஸோ

பார்வதியே அடி ...ர்கிதியே
* பாகசாசனன் மகிழ் தியாகராஜனும் புகழ் (பார்

சூரசங்காரி சிவ சுந்தரி நீலி
சுருதிமுடிவிலுறை சூலிகபாலி
ஆரணி காரணி அமரர்க்கிருபாமணி
ஆதிபுரியில்வளர் சோதிசொருபமணி (பார்)

அற்பவுட லெடுத்து அலைந்ததுபோதும்
அன்னையே தந்தருள் அருமலர்ப்பாதம்
தற்பரி சிற்பரி சத்தி பராபரி
தாசன் சங்கரலிங்கன் பேசுந்தமி ழாதரி (பார்)

வாழி விருத்தம்

செந்தமிழ் வேதம் வாழ்க தேவர்கள் முனிவர் வாழ்க
சிந்துர முகத்தோன் வாழ்க சிவசுப்ர மண்யன் வாழ்க
சுந்தரி காளி வெற்றித் துரந்தரித் தியாகர் வாழ்க
இந்திய வரசர் வாழ்க என்குரு வாழ்க மாதோ.

தியானமஞ்சரி முற்றிற்று

தனிப்பாடல்கள்

(பார்வதியிடம் பாங்கிகள் வேலவன் செயலை விவரித்தல்)

விருத்தம்

அம்பிகா மலைக்கி ழத்தி யானுள மகிழி டைச்சி
தம்பிரா னுனது மைந்தன் சண்முகன் மதன காந்தன்
எம்பிரான் றணிகை வேலன் யேதமில் கார்த்தி கேயன்
உம்பர்நா யகன்றன் செய்கை யுரைத்திடக் கேளா யம்மே.

தரு

(அம்மா மதுரை மீனுக்ஷி—என்றமெட்டு)

பார்வதி வுனதிளைய மைந்தன் சுக
பாக்ய முற்ற கந்தன் வேதாந்தன்
பாவலர்க்கருள் சாந்தன் பரமசிவானந்தன் (பார்)
காரியம் மிகவுங்கெட்டுப் போச்சு வுனக்
கானது வெகு பேச்சு வுண்டாச்சு
காசினி தனி லேச்சு கனத்தவசையாச்சு (பார்)

தாசி வீட்டேகுடி வாசம் குறத்
தையலாளி நேசம் கொண்டானே
சரியோ முருகன் வேஷம் தகாது பரிகாசம் (பார்)

தாசன் சங்கரலிங்கன் பாட்டு தன்னைத்
தாயே நிதமுங் கேட்டு எம்முடன்
சண்முகன்றனைக் கூட்டு தனியமுத மூட்டு (பார்)

கிருஷ்ணகீதம்

(ஓர் கோபிகை முருகனிடங் கிருஷ்ணலீலையை மொழிதல்)

விருத்தம்

முதுமறை புகழுந் தணிகையங் கிரிவாழ் முருகனே சிவகுரு பரனே
மதுமல ரணியுன் றாயுடன் பிறந்தோன் மாமனும் பாண்டவர் துணைவன்
துதிசெயு மடியார் துயர்தனைத் தவிர்க்குந் தூயனுந் துவாரகைப் பதிவாழ்
எதுகுல திலகன் கிருஷ்ண கோபால னேசெயும் லீலையைக் கேளாய்.

சிந்து

(உடுமலையின் முத்துசாமிபாடடை—என்றமெட்டு)

சங்கரி திகம்பரியின் பாலா தாசன்
சங்கர லிங்கனுக் கனுகூலா வுந்தன்
தாயுடன் பிறந்தமாமன் மாயவன் கோபாலகிருஷ்ணன்
தானே முரு கோனே

தங்குலத் தொழிலதனை விட்டான் ரத
சாரதித் தொழிலதனைத் தொட்டான் இந்த
சங்கதி யறிந்துஜெக மெங்குமே சிரிப்புக்கிட மாச்சு மானம் போச்சு

ஆடுமாடு மேய்ப்பதில்லை நாதா அன்பன்
அர்ஜ்ஜுன னுடன்றிரிந்து நீதா அவர்க்
கானதொரு பெண்களையே ஈனமின்றி சேர்த்துவைக்க
லானான் மனம் நாணான்

எடுதயிர் வெண்ணெயுண்ணக் கோரி பெண்கள்
யாருமரி யாமலுரி யேறி கண்ட
இடைச்சிப் பிடித்துமத்தா லடிக்கத் துடைத்து நகைத்
தானே கேளுங் கோனே

மன்னர்மன்னர் தங்களையே சூது செய்து
மானவிட்டான் பாரதத்தின் போது உந்தன்
... ...ளையோ ஐயா முரு கையா

முன்னமொரு தினமண்ணை யுண்டான் லிங்க
மூர்த்தியைப் பெண்ணாய் மணர்ந்து கொண்டான் அந்த
* மூஷிகன் றனக்கெதிரில் ரோஷமின்றி வேஷமிட்டு
நடித்தான் மனந் துடித்தான்

சொல்லமுடி யாதுயின்ன முருகா அந்தத்
துடுக்குக் கிருஷ்ணனுக்குற்ற மருகா வெகு
சோரத்தன மாகப்பதி னாயிரங் கோபியைக் கெடுத்
தானே மாயன் றானே.

மெல்ல அவன் றன்னையுன்மு னழைத்து செய்யும்
வெட்கமற்ற வேலைதன்னை நிருத்து சும்மா
விட்டுவிடில் கெட்டுமதி தட்டுகொட்டுந் தாசிரியாய்
விடுவான் பெயர் கெடுவான்

திருத்தணிகைக் கீர்த்தனம்

விருத்தம்.

கருத்தணி விசனநீக்குங் கலைமக ளருளுண்டாக்கும்
விருத்தனைக் குமரனாக்கும் விமலையின் வாழ்விற் சேர்க்கும்
நிருத்தனி னிளையமைந்தன் நீதிசேர் முருகன் வாழுந்
திருத்தணி மலையைக்காண ஜென்மசா பல்ய மாமே.

பாட்டு

(கழுதுமலைக்கு நாம் நேராய்—என்றமெட்டு)

பல்லவி

திருத்—தணிகைமலை செல்வோம் வாரீர்—கந்த
சாமிதயாநிதி பூமியுள்ளோர்துதி (தணி)

உபபல்லவி—(சந்தத்தொடர்)

ஜகத்தி னிருளதை மாற்றும்
மிகுத்த சதுர்மறை போற்றுந் (தணி.)

சாவடி சத்திர மோங்கிய
காவடி பத்தர்க ளேந்திய (தணி)

தனத்தன தந்தத் தனத்த தனத்த
வெனப்பல சிந்துப் படித்து நடித்து (தணி)

தருணத் துதவிப் புரிநற்
குகசற் குணனுற் றிடுபொற் (றணி)

---

* விநாயகரிடம் சக்கரம் பெரும்பொருட்டு, விஷ்ணு கோணக்கூத் தாடினரென்பது, சைவச்சம் பிரதாயம். (உ-ம்.) திகடச் சக்கரச் செம்முக

தளிர்வன முலவிடு மரகத
மயில்நட மிடுமதி விகசித (தணி)

சரணம்—(பின்முடுகு)

ஐங்கரற்கிளைய ஆனந்தநாதன்
ஆடுமயின்மீதி லேறும்பொற்பாதன்
சங்கரலிங்கன் சங்கீதப்பிரக்யாதன்
தையல் வள்ளிதெய்வ யானைவினோதன்
சரவணபவ குமரேசன் றனைதொழு மடியவர்நேசன்
வரமிகுதரு மகராஜன் மதிமுகசுக முருகேசன் (தணி)

இதுவுமது

விருத்தம்

ஆசையாம் வலையிற்சிக்கி யலைகடற் றுரும்புபோலே
தேசமீதாடு கின்றேன் திக்குவேறில்லை கண்டாய்
தாசனுன் சுவாமிநீயே சாற்றுமென் றுயரநீங்க
வாசமார் மயின்மீதேறி வருகுவாய் தணிகை வாழ்வே.

பாட்டு

(குடியிற்பிறந்த குயிலே—என்றமெட்டு)

கண்ணிகள்

அந்திப்பகலாகத் தொந்திக்கிறைதேடுஞ்
சிந்தனையேபெரி தென்றிருந்தாலுன்
வந்தனஞ் செய்வதெப்போ—வரம்நீ
தந்தெனை யாள்வதெப்போ
கந்தநாதா எந்தன்மீதா இந்தசூது காத்தருள்வாயே சதா (அந்)

கட்டான வாலீபம் விட்டென்னை யேகுநாள்
இட்டினதே கிழ மெட்டினபின் நீ
கொட்டி யளந்து மென்ன—பணத்தைக்
கட்டிக் குவித்துமென்ன
காலமிதே ஜாலமேனோ நீலமயில் மேல்வருவாய் முருகா (அந்)

தையலொருத்திக்குக் கையைக்கொடுத்திட்ட
ஐயா நீமெய்யான தெய்வமென் றல்லோ
துய்யபதம் பணிந்தேன்—றுயரைப்
பையசொலத் துணிந்தேன்
பாவநாசா தேவநேசா பாவலர்கள் பாடுங்குமாரேசா (அந்)

தங்கமலைமங்கை யங்கமகிழ்பாலா
சங்கரலிங்கன் றமிழ்க்கனுகூலா
தங்கமயில் வாகனா—தெய்வ
நங்கைவள்ளி மோகனா

கஞ்சிகாமாட்சித்துதி

ஆசிரிய விருத்தம்

பிள்ளையென் றுயராதைப் பெற்றதா யுனையன்றிப்
பேருலகி லாரறிகு வார்
பேசாது வாய்மூடி சும்மாயி ருப்பதுன்
பெருமைக்கு நீதி தானோ
கள்ளக் குறத்தியோ கொள்ளைப் புலைச்சியோ
கருணை யில்லாக் கசடியோ
கல்லோ யிரும்போ யிறங்காத துன்மனங்
கலிகால கோல மிதுவோ
எனுக்கு வெண்ணைபோ லெங்குநின் றிடுமுனக்
கெந்தன்முறை கேட்க விலையோ
ஏழையென் பழிபாவ மேற்காது எதிர்வந்து
இதுவேளை வரமத ருள்வாய்
தெள்ளுநீ ரோடையிற் றுள்ளிமீ னோடிடுஞ்
சீர்பெற்ற காஞ்சி நகர்வாழ்
தேகந்தெ ணீறுதிகழ் யேகம்ப ரேசர்மகிழ்
தேவி காமாக்ஷி யுமையே.

த ரு

(பத்திசாதிக்க விடாது—என்றமெட்டு)

பல்லவி

தெய்வம் வுன்னைப்போல காமாக்ஷி—யம்மா
தேசத்திற் காணேனே மீனாக்ஷி (தெய்)

அனுபல்லவி

சைவமிலங்கி எங்கும் தானந்தழைந்து பொங்குஞ்
சாந்திமணி ஒளிருங்காஞ்சி புரம்வளரும் (தெய்)

சரணம்

எத்தனைதரம் சொல்லுவேனே வுனக்
கெந்தன் மனக்குறையை நானே
பித்தம்பிடித்தவள்போல் பேசாதிருப்பதேனோ
பேசாதிருந்தாலுன்னை யேசாதுவிடுவேனோ (தெய்)

போதும்போது முந்தனைவாழ்த்தி தினம்
போற்றிப்பணிந்து பெற்றக்கீர்த்தி
எதுக்குயிந்தவாது இன்னுஞ்செய்கிறாய் சூது
எல்லாமறிந்தவுன்னை எந்தன்பாவம்விடாது (தெய்)

149421

தாயென்று முன்னை நம்பலாமோ ஜெக
ஜாலமென்பதுஞ் சும்மா போமோ
பேயென்றழைக்க யாரும்பெறுவா யென்னாலேபேறு
பெம்மானிடஞ் சொல்லுமுன் பிள்ளைஎன்முகம்பாரு (தெய்)
ஏசினேனென்று மனக்ஷாத்ரம் வேண்டாம்
எல்லாமுனதுபத ஸ்தோத்ரம்
தாசர்தினமு நாடுஞ்சதுர்மறைகள் கொண்டாடுஞ்
சங்கரலிங்கன்பாடுஞ் சங்கீதமாலைசூடும் (தெய்)

இதுவுமது

(பஹாரியாலா—என்றமெட்டு)

தகாதுபாவம் தாயே தாசன்மேல் கோபம்
ஜகானுகூலி நீயென்றுன்னைச் சார்ந்திட்டேனம்மா
விகாதமேது யின்னுஞ்சொல்ல வேண்டுமோ சும்மா-பழிவீணாகுமா()
காமபீடமேவு மெங்கள்காரணி காமாக்ஷியே
நீமனதிறங்கிசற்று நின்றுகாக்ஷியே—தாராய் நீலாக்ஷியே (தகா)
அங்குமிங்கு மெங்குமான ஆரணிபுராணி
சங்கரலிங்கன் றமிழ்ச்சங்கீதாராணி—அம்மா தாக்ஷாயணி (தகா)

ராஜவாழ்த்து

(வந்தேனு னுன்னைக்கோரி—என்றமெட்டு)

ராஜரீகமிகவாழ்க இங்லீஷ்
நாகரீகம் சூழ்க ஜார்ஜ்ஜரசர் (ராஜ)
தேசமெங்கும் பிரிடிஷ் கொடிபறந்தாடி
தீரவீர ரண சூரர்கள் கூடி
மாசிலாத ஜார்ஜ்ஜு மன்னரைப்பாடி
மாண்டேகுதுரை மந்த்ரிஸ்தாபனம்நீடி (ராஜ)
வைத்தியவித்தியா சாலைகளோங்கி
வைத்தபார்லிமெண்டு வளர்பணபாங்கி
கைத்தொழில்வியாபாரக் கடல்கப்பல்தாங்கி
காரணமானரயில் பாரெங்குமோங்கி (ராஜ)
இந்திரசந்திர ரிவரெனசாக்ஷி
இயம்பிடுமிந்திய ஜனம்புகழ்மாக்ஷி
தந்திரமந்திர ஜபதபக்காக்ஷி
தழைந்த இந்தியாவுக்குத் தரும்சுயஆக்ஷி (ராஜ)
சந்தச்சாபமுத்து சாமியைநாடும்
சங்கரலிங்கன் றமிழ்ச்சங்கீதம்பாடும்
அந்தமிகுமிந்திய மாதருள்சூடும்
அருப்புக்கோட்டை கல்விச்சங்கங்கொண்டாடும் (ராஜ)